**Series SMA**

**Code No. 6**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains 6 printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains 8 questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

*கொடுக்கப்பட்ட நேரம் : 3 மணி* *அதிக மதிப்பெண்கள் : 100*

*Time allowed : 3 hours* *Maximum Marks : 100*

## பகுதி அ

1. (அ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக : *5*

(i) சாதி இரன்டொலிய வேரில்லை

(ii) இலமையில் கள்

(iii) நம்முடைய மணம் பனத்தை விரும்புகின்றது

(iv) நான்கு மரைகளையும் நல்ல புறாணங்களையும் கற்றுத் தெளிதல் வேண்டும்

(v) தணித்திரு; விளித்திரு

(vi) ஆளும் வேலும் பல்லுக்குருதி

(vii) அரிவற்றங் காக்கும் கறுவி



www.examrace.com

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய் இட்டு எழுதுக : 5

(i) பட்ட பகலினிலே பாவலர்க்கு தோன்றுகிற கெட்ட கனவு.

(ii) தனிதனி குன்றுகளை செதுக்கிக் கோயிலாக்கினர்.

(iii) அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்தான் ?

(iv) கொத்தி திரியும் கோழியை பிடி.

(v) இடை சொல்லை பிரித்தலாகாது.

(vi) அந்த மரகுதிரை ஒரு ஓடாகுதிரை.

(vii) அறிவிப்பு பலகையில் எழுதியதை துடைக்காதே !

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு செய்க : 5

(i) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். (செயப்பாட்டு வினையாக்குக)

(ii) வாழ்க்கையில் முன்னேற கடுமையாக உழைக்கவேண்டும். (கட்டளைவாக்கியமாக மாற்று)

(iii) நான் நன்றாக பாடம் கற்றேன். (பிறவினை வாக்கியமாக மாற்றுக)

(iv) என் தந்தை, என்னிடம் காலையில் எழுந்திருக்குமாறு கூறினார். (நேர்க்கூற்றாக்குக)

(v) பொற்கொடி நன்றாக பாடியதால் பரிசுபெற்றாள். (தொடர்வாக்கியமாக மாற்றுக)

(vi) நேற்று மழை பெய்தது. (வினாவாக்கியமாக மாற்றுக)

(vii) பாண்டியன் பாடம் படித்திலன். (உடன்பாட்டுவாக்கியமாக மாற்றுக)



www.examrace.com

(ஈ) பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்று** குறித்துக் கடிதம் எழுதுக. 10

சாலைவசதி வேண்டி நகரசபை ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

**அல்லது**

அண்மையில் நீவிர் கண்டுகளித்த நாடகம் பற்றி நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக. (எக்கடிதமாயினும் உமது முகவரி த. இளவரசன்/இளவரசி 18. பாரதிசாலை, அனந்தமங்கலம் எனக்கொள்க)

## பகுதி ஆ

**2.** கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக. 10

இத்தாலி நாட்டிலிருந்து இயேசு சபையின் குருவாகிக் கத்தோலிக்க சமயம் பரப்பத் தமிழ்நாட்டிற்கு வந்த வீரமாமுனிவர் இயற்றியளித்த பெருங்காப்பியம் தேம்பாவணியாகும். மூன்று காண்டங்கள் முப்பத்தாறு படலங்கள் - மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்கள் கொண்டது தேம்பாவணி. தேம்பா + அணி என்று பிரித்தால் வாடாதமாலை என்றும் தேன் + பா + அணி என்று பிரித்தால் தேன்போன்ற பாக்களை அணியாக உடையது என்றும் பொருள்படும். கொன்ஸ்டான்டைன் ஜோசப்பெஸ்கி என்னும் இயற்பெயரைக்கொண்ட வீரமாமுனிவர் தம்பெயரை தைரியநாத சாமி என்று மாற்றிக்கொண்டார். அதனைத் தமிழ்ப்படுத்தி தமிழ்ச் சான்றோர் அவரை வீரமாமுனிவர் என்றழைத்தனர். இலத்தீனைத் தாய் மொழியாகக் கொண்ட அவர் திருக்குறளில் உள்ள முதல் இரண்டுப் பால்களையும் அம்மொழியில் மொழிபெயர்த்துள்ளார். கொடுந்தமிழ் இலக்கணம்,



www.examrace.com

தொன்னூல்விளக்கம், சதுரகராதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். கத்தோலிக்கத்திருச்சபையின் கொள்கைகளும் அறிவுரைகளும் கதைவடிவாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன. எனவே இந்நூல் கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது.

**வினாக்கள் :**

(i) தேம்பாவணியின் ஆசிரியர் யார் ? அந்நூல் எப்படியெப்படி யெல்லாம் பிரித்து பொருள் கொள்ளப்படுகின்றது ? *2*

(ii) வீரமாமுனிவரின் இயற்பெயர் யாது ? அவர் அப்பெயரை எப்படி மாற்றிக்கொண்டார் ? *2*

(iii) கிறித்துவ சமயத்தின் கலைக்களஞ்சியம் எது ? அது ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது ? *2*

(iv) சதுரகராதி என்ற நூலின் ஆசிரியர் யார் ? அவர் இயற்றியளித்த பெருங்காப்பியத்தின் பெயர் யாது ? *2*

(v) வீரமாமுனிவரின் தாய்மொழி யாது ? அம்மொழியில் அவர் எந்நூலை மொழிப்பெயர்த்தார் ? *2*

அல்லது

இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையரை நேர்காணல் செய்க. *10*

## பகுதி இ

**3.** கீழ்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பில் **மூன்று** பக்க அளவில் கட்டுரை வரைக. *15*

(i) மாணவரும் சமூகத்தொண்டும்

(ii) கூட்டுறவே நாட்டுயர்வு

(iii) என் எதிர்காலத் திட்டங்கள்



www.examrace.com

## இலக்கியம்

### பகுதி அ

4. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடைதருக. *2×10=20*

(i) தமிழ் - உயர்தனிச்செம்மொழி - இத்தலைப்பின் கீழ் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

(ii) பண்டைத்தமிழ் மக்கள் மேற்கொண்டிருந்தத் தொழில்களையும் அவர்கள் தனிநாகரிகராய் வாழ்ந்தமை பற்றியும் கட்டுரை ஒன்றுவரைக.

(iii) வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை ?

(iv) கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்ரு கருத்துகளை கட்டுரை வடிவில் தருக.

### பகுதி ஆ

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடைதருக : *2×5=10*

(i) செய்ந்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்தின் கீழ் வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

(ii) வினை முற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியது யாது ?

(iii) கண்ணகியின் சூளுரையையும் நகரமாந்தர் மயங்கிக் கூறியன வற்றையும் தொகுத்து வரைக.

(iv) அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளைத் தொகுத்து எழுதுக.


www.examrace.com

6. கீழ்வரும் செய்யுட்பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக : 5

'நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்'

(i) பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ? அந்நூலுக்கு அப்பெயர்வரக் காரணம் என்ன ? 2

(ii) யாரைப் பார்த்து யார் இவ்வாறு கூறுகின்றார் ? 2

(iii) இவ்வடிகள் வாயிலாக நாம் அறிவது யாது ? 1

அல்லது

'திங்களொான் றிருப்பன் இன்னே; திருவுளம் தீர்ந்த பின்னை
மங்குவென் உயிரோடன்றுன் மலரடி சென்னி வைத்தாள்.'

(i) இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? 2

(ii) இவ்வாறு யார் யாரிடம் கூறியது ? 2

(iii) 'உன் மலரடி' என்பது யாருடைய மலரடியைக் குறிக்கும் ? 1

## பகுதி இ

7. 'மகன்' — இக்கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. 10

அல்லது

'பால்வண்ணம்பிள்ளை' — என்ற கதையைப்பற்றிய உன் கருத்துகளைத் தொகுத்து தருக.

8. பூந்தோட்டச் சாமியின் பண்புகள் யாவை ? 5

அல்லது

கோமதியின் பாத்திரப்படைப்பை விவரிக்க.



www.examrace.com